TNPD010015422025

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Aadi Thingal 04th day

Monday the 20th day of July 2026

Calender Case No.71/2025
CNR No.TNPD01-001542-2025

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | NIB-CID Sivagangai P.S. in Cr.No.14/2024 u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | Rajasekar |
| 4. | Father's Name /Husband Name | Kamalnathan |
| 5. | Occupation | Coolie |
| 6. | Residence | 15, Puduvayal, Sakkottai, Karaikudi Tk, Sivagangai Dt. |
| 7. | Age | 34 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 11.12.2024 |
| 9. | Complaint | 11.12.2024 |
| 10. | Apprehension | 11.12.2024 |
| 11. | Release on bail | 07.01.2025 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 06.07.2026 |
| 14. | closure of trial | 15.07.2026 |
| 15. | Sentence or order | 20.07.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 20.07.2026 |

| | | |
|---|---|---|
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **<u>Chief</u>** **<u>Cross</u>**<br>1) 06.07.2026 – 06.07.2026<br>2) 06.07.2026 – 06.07.2026<br>3) 14.07.2026 – 14.07.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 15.07.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 11.12.2024 - 07.01.2025 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 22.03.2025 |

இவ்வழக்கு 15.07.2026–ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது வழக்கறிஞர் திரு.எம்.செந்தில்குமார், B.A.,L.L.B., (Hons) அவர்கள் முன்னிலையாகியும். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்பாபு, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 11.12.2024-ம் தேதி 08.00 மணிக்கு பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் இவ்வழக்கின் எதிரி அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளான பூ, இலை, காம்பு, விதைகளுடன் கூடிய நான்கு கிலோ எடை கொண்ட கஞ்சாவை மொத்தமாக வாங்கி வந்து எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் விற்பனை செய்துவிட்டு மீதமிருந்த 2.100 கிகி கஞ்சாவை மீண்டும் விற்பனை செய்வதற்காக வெள்ளை நிற சாக்கு பையில் வைத்து சிறுசிறு பாக்கெட்டுகளாக போட்டு கஞ்சா கேட்பவர்களுக்கு விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரி மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985-ன்படி NIB-CID சிவகங்கை காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207-ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985-ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01-ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.14 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–**

(i) அசா1 திரு. ராஜ்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 11.12.2024-ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.ஜெகதீசன் அவர்களுக்கு காலை 07.05 மணிக்கு போன் மூலம் கிடைத்த ரகசிய தகவலை உயர் அதிகாரிகளுக்கும் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் நிலையத்தில் இருந்த தன்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் குமார் என்பவரையும் தக்க உபகரணங்களை எடுத்து கொண்டு 7.15 மணிக்கு புறப்பட்டு சிவகங்கை தாலுகா பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் அருகே 7.30 மணிக்கு சென்று தகவலாளியை சந்தித்து விட்டு கண்காணித்து கொண்டிருந்தபோது வெள்ளை சாக்கு பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவர்களை தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு செல்ல நாங்கள் அவரை நிறுத்த முற்படும்போது ஓட முயற்சித்தவரை பிடித்தோம். சார்பு ஆய்வாளர் தனது அடையாள அட்டையை காண்பித்து தாங்கள் NIB-CID போலீசார் என அறிமுகப்படுத்திக் கொண்டதாகவும் சார்பு ஆய்வாளர் அந்த நபரிடம் தனக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலை அந்த நபரிடம் எடுத்து கூறியும் அவரை சோதனை செய்ய வேண்டுமென சொன்னார் என்றும் அப்போது சார்பு ஆய்வாளர் அந்த நபரிடம் பெயர் விலாசம் கேட்டார் என்றும் அந்த நபர் தனது பெயர் ராஜசேகர், வயது.34, த/பெ.கமலநாதன், எண்.15, புதுவயல் சாக்கோட்டை அஞ்சல் என்று கூறினார் என்றும் தங்களை சோதனை செய்ய வேண்டுமெனில் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய வேண்டுமென்று கூறினார் என்றும் அதற்கு எதிரி

தாங்களே சோதனை செய்யலாம் என கூறியதன் பேரில் அவரது விருபபத்தின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் தன்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.குமார் என்பவரையும் சாட்சியாக நியமித்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதில் எதிரியிடமும் தங்களிடமும் கையொப்பம் பெற்றார் என்றும் தன்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 1–வது கையொப்பம் தன்னுடையது என்றும் அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1 என்றும் பின்னர் எதிரி தன் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை அவர் சோதனைக்கென சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் என்றும் எதிரி வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சார்பு ஆய்வாளர் பெற்று தாங்கள் சோதனை செய்து பார்த்தபோது அதில் விதை, இலை, பூ, மொட்டுடன் கூடிய கஞ்சா என்னும் போதை பொருள் இருந்தது என்றும் அதில் சிறிதளவு எடுத்து எரித்து பார்த்தபோது அதில் கஞ்சா வாடை வந்தது என்றும் தாங்கள் தங்களது பணி பயிற்சியின் அடிப்படையில் அந்த வாடை கஞ்சா வாடை என்பதால் அது கஞ்சா என உறுதி செய்து கொண்டோம் என்றும் பின்னர் அதனை சார்பு ஆய்வாளர் எடை தராசில் எடை போட்டு பார்க்க 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும் அதை அதே வெள்ளை நிற சாக்கு பையில் மடித்து கட்டி NIB SVG என சீல் வைத்தும் விபர லேபிள் ஒட்டி அதில் சாட்சிகளாக தாங்களும் எதிரியும், சார்பு ஆய்வாளரும் கையொப்பம் செய்தோம் என்றும் அதற்கான அத்தாட்சி தன்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சி என்றும் அதிலுள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும் அந்த அத்தாட்சி அதசாஆ.2 என்றும் எதிரி சட்ட விரோதமாக கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக 9.00 மணிக்கு கைது அறிக்கை தயார் செய்து உறவினரான கற்பகம் என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தும் எதிரியை கைது செய்தார் என்றும் அதற்கான கைது அறிக்கையில் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த கைது அறிக்கை அதசாஆ.3 என்றும் எதிரி எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து தன் முன்னிலையிலும்

குமார் முன்னிலையிலும் கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் குமாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள தன்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் அதசாஆ.4 என்றும் பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி மற்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களுடன் 10.15 மணிக்கு நிலையம் வந்து சிவகங்கை NIB – CID குற்ற எண்.14/2024 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act–ன்படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்ததாகவும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா2 திரு. குமார் தனது சாட்சியத்தில் கடந்த 11.12.2024-ம் தேதி NIB-CID சிவகங்கை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.ஜெகதீசன் அவர்களுக்கு காலை 07.05 மணிக்கு போன் மூலம் கிடைத்த ரகசிய தகவலை உயர் அதிகாரிகளுக்கும் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் நிலையத்தில் இருந்த தன்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் என்பவரையும் தக்க உபகரணங்களை எடுத்து கொண்டு 7.15 மணிக்கு புறப்பட்டு சிவகங்கை தாலுகா பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் அருகே 7.30 மணிக்கு சென்று தகவலாளியை சந்தித்து விட்டு கண்காணித்து கொண்டிருந்தபோது வெள்ளை சாக்கு பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவர்களை தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு செல்ல தாங்கள் அவரை நிறுத்த முற்படும்போது ஓட முயற்சித்தவரை பிடித்தோம் என்றும் சார்பு ஆய்வாளர் தனது அடையாள அட்டையை காண்பித்து தாங்கள் NIB-CID போலீசார் என அறிமுகப்படுத்திக் கொண்டோம் என்றும் சார்பு ஆய்வாளர் அந்த நபரிடம் தனக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலை அந்த நபரிடம் எடுத்து கூறியும் அவரை சோதனை செய்ய வேண்டுமென சொன்னார் என்றும் அப்போது சார்பு

ஆய்வாளர் அந்த நபரிடம் பெயர் விலாசம் கேட்டார் என்றும் அந்த நபர் தனது பெயர் ராஜசேகர், வயது.34, த/பெ.கமலநாதன், எண்.15, புதுவயல் சாக்கோட்டை அஞ்சல் என்று கூறினார் என்றும் தங்களை சோதனை செய்ய வேண்டுமெனில் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய வேண்டுமென்று கூறினார் என்றும் அதற்கு எதிரி தாங்களே சோதனை செய்யலாம் என கூறியதன் பேரில் அவரது விருப்பத்தின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் தன்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜ்குமார் என்பவரையும் சாட்சியாக நியமித்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதில் எதிரியிடமும் தங்களிடமும் கையொப்பம் பெற்றார் என்றும் தன்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 2-வது கையொப்பம் தன்னுடையது என்றும் மேற்படி அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பின்னர் எதிரி தன் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை அவர் சோதனைக்கென சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் என்றும் எதிரி வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சார்பு ஆய்வாளர் பெற்று தாங்கள் சோதனை செய்து பார்த்தபோது அதில் விதை, இலை, பூ, மொட்டுடன் கூடிய கஞ்சா என்னும் போதை பொருள் இருந்தது என்றும் அதில் சிறிதளவு எடுத்து எரித்து பார்த்தபோது அதில் கஞ்சா வாடை வந்தது என்றும் தாங்கள் தங்களது பணி பயிற்சியின் அடிப்படையில் அந்த வாடை கஞ்சா வாடை என்பதால் அது கஞ்சா என உறுதி செய்து கொண்டோம் என்றும் பின்னர் அதனை சார்பு ஆய்வாளர் எடை தராசில் எடை போட்டு பார்க்க 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும் அதை அதே வெள்ளை நிற சாக்கு பையில் மடித்து கட்டி NIB SVG என சீல் வைத்தும் விபர லேபிள்

ஓட்டி அதில் சாட்சிகளாக தாங்களும் எதிரியும், சார்பு ஆய்வாளரும் கையொப்பம் செய்தோம் என்றும் அதற்கான அத்தாட்சி தன்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சி என்றும் அதிலுள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும் அந்த அத்தாட்சி அதசாஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி சட்ட விரோதமாக கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக 9.00 மணிக்கு கைது அறிக்கை தயார் செய்து உறவினரான கற்பகம் என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தும் எதிரியை கைது செய்தார் என்றும் அதற்கான கைது அறிக்கையில் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த கைது அறிக்கை அதசாஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து தன் முன்னிலையிலும் ராஜ்குமார் முன்னிலையிலும் கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் ராஜ்குமாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் அதசாஆ.5 என்றும் பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி மற்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களுடன் 10.15 மணிக்கு நிலையம் வந்து சிவகங்கை NIB – CID குற்ற எண்.14/2024 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act–ன்படி வழக்கு பதிவு செய்ய உதவியாக என்றும் பின்பு காவல் ஆய்வாளர் விசாரிக்க நடந்த விவரம் சொன்னேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அசா3 திரு. ஜெகதீசன், தனது சாட்சியத்தில் கடந்த 11.12.2024–ம் தேதி தான் சிவகங்கை போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் சார்பு

ஆய்வாளராக பணியாற்றியபோது காலை 7.05 மணிக்கு ரகசிய தகவலாளி தன்னிடம் தொலைபேசி மூலம் சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை அஞ்சல் புதுவயல் கதவு எண்.15/6 கமலநாதன் மகன் ராஜசேகரன் என்பவர் கஞ்சா என்னும் போதை பொருளை விற்பதாக தகவல் சொன்னார் என்றும் தான் அதனை பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் காவல் ஆய்வாளர் திருமதி.அன்னலெட்சுமி அவர்களுக்கும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் தகவல் தெரிவித்து விட்டு தான் தனது தலைமையில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் குமார் ஆகியோர்களுடன் தானும் நிலையத்திலிருந்து 7.15 மணிக்கு புறப்பட்டு தகவலாளி சொன்ன இடமான பெருமாம்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் 7.45 மணிக்கு சென்று தகவலாளியை சந்தித்து விட்டு கண்காணித்து கொண்டிருந்தபோது 8.00 மணிக்கு பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் நடந்து வந்து கொண்டிருந்த நபரை தகலாளி அடையாளம் காட்டி செல்ல தாங்கள் அவரை நிறுத்திய போது ஓட எத்தணித்தவர்களை மடக்கி பிடித்து தங்கள் அடையாள அட்டை காண்பித்து எங்களை NIB CID சிவகங்கை போலீசார் என அறிமுகம் செய்து கொண்டு கஞ்சா விற்பதாக தகவல் வந்தது என்றும் தங்களது உடைமைகளையும் உரிமைகளையும் சோதனை செய்ய வேண்டுமென்றும் உங்களை நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று சோதனை செய்யலாமா என்று கேட்டோம் என்றும் அதற்கு அவர்கள் அங்கெல்லாம் வேண்டாம் நீங்களே சோதனை செய்யலாம் என்று சம்மதம் தெரிவித்தனர் என்றும் தான் சோதனை சம்மத கடிதம் தயார் செய்து எதிரியிடம் கையொப்பம் பெற்று இதில் சாட்சிகளாக சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார், குமார் கையொப்பம் செய்தார்கள் என்றும் அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது என்றும் அதை தாங்கள் கொண்டு சென்ற தராசில்

எடை போட்டு பார்த்தபோது அது 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும் அந்த கஞ்சாவினை அதே பையில் வைத்து கட்டி நான் P1 என குறியீடு செய்து அதில் NIB CID சிவகங்கை என சீல் வைத்தார் என்றும் எதிரி வைத்திருந்த கஞ்சாவை தான் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன் என்றும் அதில் சாட்சிகளாக ராஜ்குமார், குமார் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள் என்றும் அதில் எதிரியும் கையொப்பம் செய்தார் என்றும் பின்பு தான் கஞ்சா வைத்திருந்த காரணம் கூறி எதிரிக்கு கைது அறிவிப்பு கடிதம் கொடுத்து காரணம் கூறி கைது செய்தேன் என்றும் அதில் சாட்சியாக ராஜ்குமார், குமார் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றும் எதிரியும் கையொப்பம் செய்தார் என்றும் அந்த கைது அறிவிப்பு கடிதம் அதசாஆ.3 என்றும் எதிரி ராஜசேகர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தன்னிடம் சாட்சிகள் ராஜ்குமார் மற்றும் குமார் ஆகியோர் முன்னிலையில் கொடுத்தார் என்றும் அதனை தான் பதிவு செய்தேன் என்றும் அதில் சாட்சிகளாக ராஜ்குமார் மற்றும் குமார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றும் எதிரியும் கையொப்பம் செய்தார் என்றும் எதிரி மற்றும் தடய சொத்துக்களுடன் காலை 10.15 மணிக்கு நிலையம் வந்து தான் எதிரியை நிலைய பாரா வசம் ஒப்படைத்தும் நிலைய குற்ற எண்.14/2024 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii) (B) of NDPS Act– ன்படி வழக்கு பதிவு செய்தேன் என்றும் அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.6 என்றும் பின்பு வழக்கின் கோப்பை மேல் அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி.அன்னலெட்சுமி அவர்களிடம் ஒப்படைத்தேன் என்றும் அவர் பணி மாறுதலில் சென்று விட்டதால் அவரது கையொப்பம் தனக்கு பரிசையமானதாகும் என்றும் அதன் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும் பின்பு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் எண்.95 மூலம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி ஆர்பி எண்.341/2024 என்று வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த படிவம் எண்.95 அசாஆ.7 என்றும் பின்பு வழக்கு சொத்தினை காவல் ஆய்வாளர் NDPS Act–ன்படி 52(எ)ன் பிரகாரம்

Inventory எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.1 வழக்கு சொத்தினை ஆய்வு செய்து Annexure I, Annexure II ஆகியவற்றை தயார் செய்துள்ளார் என்றும் சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் முன்பாக வழக்கு சொத்தினை புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் Annexure I அசாஆ.8 என்றும் Annexure II அசாஆ.9 என்றும் புகைப்படங்கள் எண்ணிகை 1 அசாஆ.10 என்றும் இவ்வழக்கில் தான் தயார் செய்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்த NDPS Act–ன்படி 57–ன் பிரகாரம் தாக்கல் செய்த விரிவான அறிக்கை அதசாஆ.11 என்றும் தடய சொத்தினை இந்நீதிமன்றத்தின் மூலம் ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டும் பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும் அந்த பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.12 என்றும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கஞ்சா இந்நீதிமன்ற உத்தரவுப்படி Drugs Disposal Committee மூலம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கான அழிப்பு உத்தரவு நகல் அதசாஆ.13 என்றும் தான் இவ்வழக்கில் தனக்கு வந்த ரகசிய தகவலை எழுத்து மூலமாக பதிவு செய்து தனது மேல் அதிகாரிக்கு அனுப்பிய முன் தகவல் அதசாஆ.14 என்றும் இவ்வழக்கில் காவல் ஆய்வாளர் திருமதி.அன்னலெட்சுமி தனது புலன் விசாரணையை முடித்து 07.01.2025–ம் தேதி இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரி அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரி மீதான u/s 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985– ன்படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரியை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக திரு.ராஜ்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவர்

விசாரிக்கப்பட்டுள்ளார். அசா1 மூலமாக அசாஆ1 முதல் 4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா2 ஆக குமார் சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா2 மூலமாக அசாஆ5 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன.அசா3 ஆக சார்பு ஆய்வாளர் திரு.ஜெகதீசன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார், அவர் மூலமாக அசாஆ6 முதல் அசாஆ14 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

12. அரசு தரப்பில் அசா3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சார்பு ஆய்வாளர், ஜெகதீசன் தன்னுடைய சாட்சியத்தில் 11.12.2024–ம் தேதி காலை 07.05 மணிக்கு தனக்கு தகவலாளி தொலைபேசி மூலம் கொடுத்த தகவலின்பேரில் அதனை காவல் ஆய்வாளர் அன்னலட்சுமி, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வசம் தெரிவித்தும் , , முன் அனுமதி பெற்றும் தனது தலைமையில் சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் ராஜ்குமார் , குமார் ஆகியோர்களுடன் காலை 07.15 மணிக்கு புறப்பட்டு பெருமாம்பட்டிபஸ்ஸ்டாபு அருகே 7.45 மணிக்கு சென்று அங்கு இருந்த தகவலாளியுடன் பேசியும் காலை 08.00 மணிக்கு அந்த இடத்தினை கண்காணித்தபோது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் ஒரு நபர் நின்று கொண்டிருந்ததாகவும் தப்பி ஓட முயற்சித்த அந்த நபரை தாங்கள் மடக்கி பிடித்தும் , தான் அவரை விசாரணை செய்தபோது அவர் தன்னுடைய பெயர் ராஜசேகர் என்று சொன்னதாகவும் அவரிடம் அவரை பற்றி விசாரித்தும் அவரிடம் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்ய அழைத்து செல்லவா என கேட்டதாகவும் அதற்கு ராஜசேகர் தன்னை வேறு எங்கும் அழைத்து செல்லவேண்டாம் என்றும் தாங்களே சோதனை

செய்யலாம் என்றும் சம்மதம் தெரிவித்ததாகவும் , சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும் அதில் எதிரியிடம் கையொப்பம் பெற்றும் அதில் தானும் கையொப்பம் செய்ததாகவும் அந்த சோதனை சம்மத கடிதம் அசாஆ 1 என்றும் எதிரி வைத்திருந்த வெள்ளைநிற சாக்கு பையை வாங்கி சோதனை செய்ததில் அதில் கஞ்சா இருந்ததாகவும் அந்த கஞ்சாவின் எடை 2.100 கிகி என்றும் அதில் பகுப்பாய்வுக்கென தான் மாதிரி எடுத்தும் கஞ்சாவை அத்தாட்சியில் தான் கைப்பற்றியதாகவும் அதற்கான அத்தாட்சி அசாஆ 2 என்றும் தான் இவ்வழக்கின் எதிரியை கஞ்சாவுடன் பிடித்தும் கைது அறிவிப்பு கொடுத்தும், கைதுசெய்து தடய சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது அசாஆ 6 –ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும் வழக்கு சொத்தினை அசாஆ 7 படிவம் 95–ன் படி நீதிமன்றத்தில் ஒப்படைத்தும் ஆர்பி எண்.341/2024 பெற்றும் தடய சொத்தின் மாதிரியை நீதிமன்றத்தின் மூலம் இரசாயன பகுப்பாய்வுக்கு இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியும் தடய சொத்தினை சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் ஒப்படைத்தும் Inventory எடுத்தும் Annexure –I அசாஆ 8 Annexure –II அசாஆ 9 என்றும் புகைப்படங்கள் அசாஆ 10 என்றும் தான் வழக்கில் மேற்கொண்ட சோதனை குறித்து அசாஆ 11 விரிவான அறிக்கை தயார் செய்தும் வழக்கு சொத்தினை இந்நீதிமன்றத்தின் மூலம் பகுப்பாய்வுக்கு அனுப்பியும் வரப்பெற்ற பகுப்பாய்வு அறிக்கை அசாஆ 12 என்றும் தடய சொத்தினை இந்நீதிமன்றத்தின் மூலம் அழிக்க ஏற்படுத்தப்பட்ட உத்தரவின் நகல் அசாஆ 13 என்றும் முன் தகவல் அசாஆ 14 என்றும் இராமநாதரபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து வரப்பெற்ற பகுப்பாய்வு

அறிக்கை அசாஆ12 என்றும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ1 சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ எதிரியிடம் , எதிரியாகிய உனக்கு சோதனை செய்ய சொல்ல உரிமையுள்ளது என்ற வாசகம் குறிப்பிட்டு அசா3 சார்பு ஆய்வாளரால் சொல்லப்பட்டுள்ளது . அது வகைக்கு NDPS சட்டப்பிரிவு 50–ன் விதிமுறைகளை முறையாக அசா3 சார்பு ஆய்வாளர் திரு. ஜெகதீசன் இவ்வழக்கு சோதனையில் பின்பற்றியுள்ளது தெரியவருகிறது.

13. மேலும், அசா3 –ன் சாட்சியம் மற்றும் அசாஆ14 முன் தகவல் ஆகியவற்றை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா3 தான் தனக்கு கிடைத்த தகவலின் பேரில் அதனை அசாஆ14 முன் தகவலாக அவரது உடனடி மேலதிகாரி காவல் ஆய்வாளர் அன்னலட்சுமி மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தெரிவித்தும், முன் அனுமதி பெற்றும், அசா1, 2–ன் உதவியுடன் சோதனைக்கு சென்றுள்ளதால் அதுவகைக்கு NDPS சட்டப்பிரிவு 42(1)–ன் விதிமுறைகளை அசா3 முறையாக பின்பற்றி சோதனைக்கு சென்றுள்ளது தெரியவருகிறது.

14. மேலும், அசா1 திரு. ராஜ்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் மற்றும் அசா2 திரு. குமார் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆகியோர் தங்களின் சாட்சியத்தில் 11.12.2024–ம் தேதி காலை 07.05 மணிக்கு சார்பு ஆய்வாளர் ஜெகதீசனுக்கு வந்த தகவலின் பேரில் தாங்கள் இருவரும், சார்பு ஆய்வாளர் ஜெகதீசன் தலைமையில் இவ்வழக்கு சோதனைக்கு பெருமாபட்டி பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்தபோது இவ்வழக்கின் எதிரி கஞ்சா சகிதம் கையும் மெய்யுமாக சார்பு ஆய்வாளர் அசா3 ஜெகதீசன்

அவர்களிடம் பிடிப்பட்டது குறித்தும் அதற்கு சாட்சியாக தாங்கள் இருவரும் உடன் இருந்தது குறித்தும் முன் வைத்துள்ள சாட்சியம் ஒன்றுக்கொன்று கோர்வையாகவும் இயற்கையாகவும் உள்ளது.

15. மேலும், இவ்வழக்கில் எதிரியிடமிருந்து NIB CID சிவகங்கை நிலைய சார்பு ஆய்வாளர் அசா3 கஞ்சாவினை அசா1 ,அசா 2–ன் முன்னிலையில் கைப்பற்றியுள்ளது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் அதுவகைக்கு எதிரி மீதான வழக்கிடை குற்றச்சாட்டு அசா1 முதல் 3–ன் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின்படி தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. அதுவகைக்கு, அசா3 சார்பு ஆய்வாளர் திரு. ஜெகதீசன் NDPS ச/பி 42(1),50,57 –ன் படியான விதிமுறைகளை முறையாக கைகொண்டு சோதனை மேற்கொண்டும் எதிரியிடமிருந்து கையும், மெய்யுமாக அசா1,2–ன் முன்னிலையில் 1.100 கிகி கஞ்சாவை கைப்பற்றியுள்ளது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் வழி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

16. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54–ன் பிரகாரம் எதிரி சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் எதிரி 1.100 கிகி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்தும் குற்ற செய்கையில் ஈடுபட்டு உள்ளது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் எதிரி தரப்பில் NDPS

சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் எதிரியால் முன்னிடப் பட்டிருக்கவில்லை.

17. மேலும், இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிடப்பட்டுள்ள அசா1 முதல் அசா3 வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ1 முதல் அசாஆ14 வரையிலான சான்றாவணங்கள் அடிப்படையில் எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் அது வகைக்கு எதிரி மீதான NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19. ஆகவே எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து எதிரியிடம் வினவ, எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

| |
|---|
| எனது வயது 34 ஆகும். என்னை மன்னிக்க வேண்டும். |

ஆகவே, எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2025–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும், எதிரி தவறாமல்

நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார் என்பதாலும் எதிரியின் கோரிக்கையினை ஏற்றும், எதிரிக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

20. முடிவாக எதிரி 1985-ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9-01 ச-பி 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985-ன்படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு 28 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/- விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428-ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி 11.12.2024 முதல் 07.01.2025 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் . எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/- ஆகும்.

21. இவ்வழக்கில் ஆர்பிஎண்.341/2024-ல் குறியீடு செய்யப்படாத கஞ்சாவை பொறுத்து அதனை இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 20–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.07.20 18:13:47 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

<u>சாட்சி பட்டியல்–</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்–</u>

அ.சா.1 – திரு.ராஜ்குமார், சார்பு ஆய்வாளர்.

அ.சா.2 – திரு.குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர்.

அ.சா.3 – திரு.ஜெகதீசன், சார்பு ஆய்வாளர்.

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>

அ.சா.ஆ.1 – சோதனை சம்மத கடிதம்
அ.சா.ஆ.2 – அத்தாட்சி
அ.சா.ஆ.3 – 52–ன்படியான கைது அறிவிப்பு கடிதம்
அ.சா.ஆ.4 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1–ன் சாட்சி கையொப்பம்
அ.சா.ஆ.5 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.2 ன் சாட்சி கையொப்பம்
அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.7 – படிவம் 95

அ.சா.ஆ.8 – Annexure I

அ.சா.ஆ.9 – Annexure II

அ.சா.ஆ.10 – புகைப்படங்கள் எண்ணிக்கை 1

அ.சா.ஆ.11– சட்ட பிரிவு 57–ன்படியான விரிவான அறிக்கை

அ.சா.ஆ.12 – பகுப்பாய்வு அறிக்கை

அ.சா.ஆ.13 – அழித்தல் உத்தரவு

அ.சா.ஆ.14 – முன்தகவல்

<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u> – இல்லை.

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்</u>–இல்லை.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.07.20 18:13:54 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருக்கிறார்.

2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. எதிரிக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft
Judgment in C.C.71/2025
Dt. 20.07.2026.